## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு

## வழக்கு எண் - O.S.No.188/2012 P.W.1

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.E.வெங்கட்ராமன், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **பெயர்:** முத்துராஜ் | **தொழில்:** |
| **த/பெ.:** | **மதம்:** |
| **கிராமம்:** | **ஜாதி:** |
| **வயது:** | **வட்டம்:** காஞ்சிபுரம் |

**முதல் விசாரணை: - 01.10.2019**

நான் இந்த வழக்கில் முதல் வாதி. இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 11 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.No.188/2012 P.W.1 - முத்துராஜ் 30.10.2019**

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

வாதி ஆஜர்.

1. 24.05.1989 தேதியிட்ட வாதிகளின் தாயார் திருமதி.சங்கரிக்கு திருமதி.ஹேமலதா என்பவர் எழுதி கொடுத்த கிரய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1.
2. 28.04.1989 தேதியிட்ட திருமதி.ஹேமலதாவிற்கு திருமதி.பிரேமா ரங்காச்சாரி என்பவர் எழுதி கொடுத்த கிரய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2.
3. 23.05.1984 தேதியிட்ட வாதிகள் தகப்பனார் திரு.மாரியப்பன் அவர்கள் திரு.குழந்தைசாமி வகையறாவிடமிருந்து வாங்கிய கிரய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3.
4. 12.06.2000 தேதியிட்ட மாரியப்பனின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4.
5. 08.11.2004 தேதியிட்ட மாரியப்பனின் வாரிசு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.5.
6. 10.01.2006 தேதியிட்ட சங்கரியின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.6.
7. 23.06.2006 தேதியிட்ட சங்கரியின் வாரிசு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.7.
8. 08.07.2011 தேதியிட்ட தாவா 1வது அயிட்ட சொத்துக்கான வில்லங்க சான்றிதழ் அசல் வா.சா.ஆ.8.
9. 13.09.2011 தேதியிட்ட வாதிகளும், 3 முதல் 5 பிரதிவாதிகளும் இணைந்து 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.9.
10. 1ம் பிரதிவாதியிடமிருந்து திருப்பப்பட்ட அஞ்சல் உறை அசல் வா.சா.ஆ.10.
11. 2ம் பிரதிவாதியிடமிருந்து திருப்பப்பட்ட அஞ்சல் உறை அசல் வா.சா.ஆ.11.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:-**

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.No.188/2012 P.W.1 – முத்துராஜ் 21.02.2020**

**<u>3 மற்றும் 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

சாட்சி ஆஜர்.

3 மற்றும் 4ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தனர்.

(6 முதல் 8ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**6 முதல் 8 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் என் தகப்பனாரின் 2வது மகன். சென்னையில் நான் கூலி தொழில் செய்கிறேன். என் 2வது பிரதிவாதி என் சகோதரர். அவர் அரியலூரில் எலக்ரானிக் கடை வைத்துள்ளார். அவர் மாதம் எவ்வளவு வருமானம் ஈட்டுகிறார் என்று எனக்கு தெரியாது. 2வது வாதி பொற்கொடி வேலை எதுவும் பார்க்கவில்லை. 3 முதல் 5 பிரதிவாதிகளும் அரசாங்க வேலையில் இருக்கிறார்கள். என் அப்பா காவல் துறையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி பணியிலிருக்கும் போதே இறந்து விட்டார். என் அப்பாவிற்கு சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்கூடான் கிராமம். என் அப்பா, அம்மா பெயரில் என்னென்ன சொத்துக்கள் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. என் அப்பா, அம்மா இறந்ததற்கு பிறகு அவர்களுடைய சொத்துக்கள் எதையும் விற்கவில்லை என்றால் சரிதான். என் அப்பாவிற்கு மனை எண்.32, பாலாஜிநகர், ஆதம்பாக்கத்தில் ஒரு வீட்டு மனை இருந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா, அம்மா இறந்த பிறகு ஆதம்பாக்கம் சொத்தை விற்பதற்கு நான் எந்த கையொப்பம் போடவில்லை என்றால் ஆமாம். என் அப்பாவிற்கு அபிராமபட்டிணத்தில் சொத்து இருக்கிற விவரம் பற்றி எனக்கு தெரியாது. என் அப்பாவிற்கு அவரது சொந்த ஊரான முத்துக்கூடானில் 2 ஏக்கர் விவசாய நிலம் இருக்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நிலம் இருப்பது தெரியும். அந்த 2 ஏக்கர் விவசாய நிலத்தை யார் அனுபவிக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் வழக்கு போடும் சமயத்தில் அப்படியே தான் இருந்தது. அந்த 2 ஏக்கர் விவசாய நிலத்தை இந்த வழக்கில் சொத்து விவரத்தில் காண்பித்துள்ளேனா என்றால் (சாட்சி மீண்டும்) அந்த சொத்து இருக்கிறதா இல்லையா என்று எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண நகலில் 2வதாக உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. (மீண்டும் அந்த ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. சாட்சி கண்டிப்பாக அந்த ஆவணத்தில் இருப்பது என்னுடைய கையொப்பம் இல்லை) என் அப்பாவிற்கு ஆதம்பாக்கத்தில் சொத்து உள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. முதல் பிரதிவாதி நாகராஜ் திருமணம் முடிந்த பிறகு தான் 1வது அயிட்ட சொத்தான நீலாங்கரை சொத்தில் குடியேறினார் என்றால் சரிதான். கல்யாணம் ஆகி ஒரு வருடத்தில் நீலாங்கரை சொத்தில் குடியேறினார். முதல் பிரதிவாதி நீலாங்கரை வீட்டில் 1991ல் இருந்து வசிப்பதாக சொன்னால் அங்கும் இருப்பார்கள். இங்கும் இருப்பார்கள். அப்பாவும்,

அம்மாவும் செங்கல்பட்டில் தான் இருந்தார்கள் என்றால் அவர்கள் எல்லா பிள்ளைகள் வீட்டிலும் இருப்பார்கள். 1997ல் என் அப்பா இறந்து விட்டார். 2005ல் என் அம்மா இறந்து விட்டார். என் அப்பா இறந்த பிறகு என் அம்மாவும் எல்லா பிள்ளைகள் வீட்டிலும் இருந்தார். நீலாங்கரை வீடு மற்றும் அங்குள்ள கடைகளை யார் கட்டினார்கள் என்றால் எல்லோரும் சேர்ந்து கட்டினோம். எல்லோரும் சேர்ந்து நீலாங்கரை வீட்டை கட்டினோம் என்பதற்கு ஆதாரம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சிமெண்ட், மணல், அவ்வபோது காசு கொடுப்பேன். நீலாங்கரையில் வீடு கட்டுவதற்கு நானோ, என் அப்பாவோ அல்லது என் அம்மாவோ எந்தவித பண உதவியும் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் அம்மாவிற்கு காஞ்சிபுரம் தேனா வங்கியில் உள்ள வங்கி லாக்கரில் நகை, சொத்து ஆவணங்கள், வேறு என்னவெல்லாம் வைக்கப்பட்டிருக்கிறது என்று எனக்கு தெரியாது.

O.S.No.188/2012 P.W.1 – முத்துராஜ் 15.06.2023

<u>முதல் விசாரணை தொடர்ச்சி:-</u>

இன்று இந்த வழக்கில் கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 2 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 03.12.2020 தேதியிட்ட வழக்கு சொத்து அயிட்டம் எண்.4க்கு மாரிமுத்து பெயரில் தாக்கலாகியுள்ள பட்டா எண்.78 (இணைய தளத்திலிருந்து பெறப்பட்டது) - வா.சா.ஆ.12.

2. 19.01.2023 தேதியிட்ட 6 முதல் 8 பிரதிவாதிகள் வழக்கு சொத்து அயிட்டம் எண்.1ல் கட்டி வரும் கூடுதல் கட்டிடத்தை பிரதிபலிக்கும் புகைப்படங்கள் (3 எண்ணிக்கை மற்றும் சி.டி. அசல் - வா.சா.ஆ.13.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>**6 முதல் 8ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

(6 முதல் 8ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் பெற்றோர்கள் சம்பாதித்த சொத்துக்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் இன்று வரை பாகம் பிரிப்படாத சொத்துக்களாக உள்ளதா என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் 7 பாகங்களாக பிரித்து அதில் வாதிகளுக்கு 2 பாகமும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் 5 பாகமும் கொடுக்கத்தக்கது என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் எதுவும் என் பெற்றோருக்கு உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்து அயிட்டம் 1ல் உள்ள கட்டிடம் வாதிகள் மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளும் சேர்ந்து கட்டிய கட்டிடம் என்றால் சரிதான். தாவா முதல் அயிட்ட சொத்தில் உள்ள கட்டிடத்திற்கான வாடகை யார் பெற்று வருகிறார்கள் என்றால் 1ம் பிரதிவாதியின் மனைவி மற்றும் அவரது பிள்ளைகள் பெற்று வருகிறார்கள். 3, 4 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தில் சம பாகம் கொடுப்பதிடில் எனக்கு ஆட்சேபனை ஏதும் உள்ளதா என்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை.

**6 முதல் 8ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

(6 முதல் 8ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**6 முதல் 8ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் அம்மா வேலை பார்க்கிறார்களா என்றால் இல்லை, வீட்டில்தான் இருக்கிறார். என் அப்பா, என் அம்மா பெயரில் நிறைய சொத்துக்கள் வாங்கினார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் விசிடிங் கார்டு என்னுடையதா என்றால் என்னுடையது தான். அந்த விசிடிங் கார்டில் என்ன விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் லேக் அவன்யூ, திருக்கழுக்குன்றம் ரோடு, A.G.சர்ச் அருகில் செங்கல்பட்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(6 முதல் 8ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>6 முதல் 8ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-

என்னிடம் காண்பிக்கப்படும் விசிடிங் கார்டில் உள்ள விலாசம் என்னுடையதா என்றால் என்னுடையதுதான். அந்த விசிடிங் கார்டு ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வதற்கு 65(பி) Certificate சான்று வழங்கப்பட்டுள்ளது) பி.சா.ஆ.1 ஆவணத்தில எண்.712/1, லேக் அவன்யூ, முதல் தெரு, TKM ரோடு, செங்கல்பட்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தை நான்தான் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தை எந்த வருடத்திலிருந்து நடத்தி வருகிறேன் என்றால் 2013ல் இருந்து நடத்தி வருகிறேன். மேற்படி நிறுவனம் நடத்தி வரும் நிறுவனம் எனது சொந்த கட்டிடமா என்றால் ஆமாம். தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தின் கலர் ஜெராக்ஸில் உள்ள கட்டிடம் என்னுடைய சொந்த கட்டிடமா என்றால் என் பெயரிலுள்ள சொந்த கட்டிடமாகும். அந்த புகைப்படத்தின் கலர் ஜெராக்ஸ் பி.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. மேற்படி கட்டிடம் எவ்வளவு விஸ்தீரணத்தில் கட்டப்பட்டுள்ளது என்றால் 2 3/4 சென்டில் கட்டப்பட்டுள்ளது. எந்த வருடம் மேற்படி இடத்தை வாங்கினேன் என்றால் 1997ல் என் அப்பா இறப்பதற்கு 2 வருடத்திற்கு முன்பு வாங்கினேன். என் அம்மா பெயரில் அழகேசன் நகரில் 5000 சதுர அடி சொத்து வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் குடியிருக்கும் இடத்திற்கும், அழகேசன் நகருக்கும் இடையில் எவ்வளவு கிலோ மீட்டர் தூரம் என்றால் 3 கிலோ மீட்டர் தூரமிருக்கும். 4ம் பிரதிவாதி வசந்திக்கு அழகேசன் நகரில் இடம் உள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் நான் தற்போது நம்பர் 163, சாய் நகர், நெம்மேலி கிராமத்தில் வாடகைக்கு கடந்த 1 1/2 வருடங்களாக குடியிருக்கிறேன். எனது கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் முத்தமிழ் நகரில்

குடியிருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அந்த விலாசத்தில் முதலில் குடியிருந்தேன், தற்போது இல்லை. நான் வழக்குரையில் இரண்டு சொத்துக்களை சேர்த்து திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இரண்டு சொத்துக்களையும் நீதிமன்ற ஆணையர் மூலம் பார்வையிட்டு அதன் அடிப்படையில் வழக்குரையில் சொத்து விவரத்தில் திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 12 சொத்தின் அசல் ஆவணங்களை லாக்கரில் இருந்து எடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அப்பா பெயரிலுள்ள 12 சொத்துக்களும் எங்குள்ளது என்றால் நீலாங்கரை மற்றும் அரியலூரில் உள்ளது. மேற்படி 12 ஆவணங்களும் எந்த சொத்துகளுக்குரியது என்று பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. மேற்படி 12 ஆவணங்களும் எனது அப்பா பெயரில்தான் உள்ளது என்று நீதிமன்ற ஆணையர் சொல்லியுள்ளதை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை.

(6 முதல் 8ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)